முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் ஆர்த்தெழுந்து இந்திய அரசியல்சட்டத்தை காப்பாற்ற வேண்டிய அவசர - அவசியம்!

இந்திய தேசியம் என்பது இந்தியத் துணைக்கண்ட புவியியல் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும். இந்திய நிலப்பரப்பினை வரலாற்று ஆசிரியர்கள் துணைக்கண்டம் என்றுதான் வரையறுத்துத் தெரிவிக்கிறார்கள். எனவே, இங்கு இனம் - மொழி - மதம் - பண்பாடு ஆகிய அடிப்படை வேறுபாடுகளை உள்ளடக்கிய பல்வேறு தேசிய இனங்கள் தொன்றுதொட்டுப் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து வருகிறார்கள். "இந்தியா" என்ற சொற்றொடர் இன்றைய எல்லைகளை உள்ளடக்கிய பகுதிகளை மட்டும் குறிப்பிடுவதாக இல்லை. மாறாக, பிரிந்துபோன வேறுசில பகுதிகளையும் உள்ளடக்கிய நிலையிலும் இந்தியா என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தியா என்ற சொல்லே ஆங்கிலேயருடைய ஆட்சியில்தான் வழக்கில் வந்துள்ளதாக அறியமுடிகிறது. இந்திய அரசியல் சட்டத்தில் பிரிவு ஒன்றில் "பாரதம் என்று அறியப்படுகின்ற இந்தியா, மாநிலங்களை உள்ளடக்கிய ஒன்றியமாகும்" (India, that is Bharat, shall be Union of States - Article No.1, Constitution of India). "பாரதம்" என்பதும் புராணப் பெயரே அல்லாமல், வரலாற்றில் இடம்பெற்ற வரலாற்று ஆசிரியர்களாலும், ஆய்வாளர்களாலும் அங்கீகரிக்கப்பட்ட பெயரல்ல. இந்திய நிலப்பரப்பின் எதார்த்த நிலைமைகளையும், வேறுபட்ட தேசிய இனங்களின் அடிப்படைக் கூறுபாடுகளை எல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டுதான், நாட்டின் விடுதலைக்குப் பின்னர் இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது.

இந்தியா விடுதலை பெறுகின்ற காலகட்டத்தில், பாகிஸ்தான் தனி நாடாக விடுதலை வழங்கவேண்டு என முகமதலி ஜின்னா போராடி தனிநாடு பெற்றமையால், இந்திய அரசியல்சட்ட நிர்ணைய சபை, மேலும் நாட்டுப் பிரிவினை தலைதூக்கிவிடக்கூடாது என்பதற்காக மிகுந்த எச்சரிக்கையுடன் கூட்டாட்சி முறைக்கு சில நிபந்தனை உருவாக்கி, எஞ்சிய அதிகாரங்களை (Residury Power) ஒன்றிய அரசுக்கு வழங்கினார்கள். இந்திய ஆட்சிமுறை முழுமையான கூட்டாட்சியாக உருவாகத் தடையாக இருந்த நிகழ்வுதான் பாகிஸ்தான் பிரிவினையாகும். இந்திய அரசியல்சட்ட நிர்ணைய சபை (Constituent Assembly discussions) விவாதங்களை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் படிப்பவர்களுக்கு மிக நன்றாகவே விளங்கும்.

இந்த எதார்த்த நிலைமைகளை மிகத்தெளிவாக உணர்ந்த காரணத்தினால்தான் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திய நாட்டின் ஒற்றுமை பற்றிக் குறிப்பிடும் பொழுது, வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity) என்றும், உணர்வால் ஒன்றுபட்டுள்ளோம் (Emotional Integration) என்ற பொருள் பொதிந்த ஆங்கிலப் பதங்களைப் பயன்படுத்தினார்கள். இந்த உணர்வுகளை எல்லாம் உள்ளடக்கிய இந்திய அரசியல்சட்டத்தை பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள் உருவாக்கினார்கள்.

பொன்.முத்துராமலிங்கம்,
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்

நாடு விடுதலை பெற்றபின்னர் இந்திய உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று முடிந்த புகழ்பெற்ற கேசவானந்தபாரதி வழக்கில், இந்திய அரசியல்சட்டத்தில் உள்ள அடிப்படைக் கட்டமைப்புக்களை (Basic structure of the Constitution) திருத்த முடியாது என்று தீர்ப்பளித்து, இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கூறுகளுக்கும், நோக்கங்களுக்கும் உரிய பாதுகாப்பினை வழங்கினார்கள்.

இத்தகைய அரசியல் சூழ்நிலையில்தான் 2014, பாரதீய ஜனதாக்கட்சி நரேந்திரமோடி தலைமையில் ஒன்றியத்தில் ஆட்சி அமைக்கிறது. அன்று முதல் பிரதமர் நரேந்திரமோடி, ஆர்.எஸ்.எஸ்ஸின் அரசியல் நிகழ்ச்சி நிரலை திட்டமிட்டு நிறைவேற்றும் முயற்சியில் தொடர்ந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டுக் கொண்டு வருகிறார் என்பதை அரசியல் நோக்கர்களும், விமர்சகர்களும் மிகநன்றாகவே அறிவார்கள். ஆர்.எஸ்.எஸ்ஸின் அரசியல் திட்டங்களில் ஒன்றுதான் குடியரசு ஆட்சிமுறையை மாற்றிவிட்டு, ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டுவந்து அதன் மூலம் இந்துத்துவாக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட இந்து ராஷ்ட்ரத்தை அமைப்பதாகும்.

இந்த ஆர்.எஸ்.எஸ்ஸின் திட்டத்திற்கு பெரும்தடையாக இருப்பது இந்திய அரசியல்சட்டமாகும். எனவே, படிப்படியாக இந்திய அரசியல்சட்டத்தைச் செயலிழக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில்தான் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை பல்வேறு முறைகளில் கையாண்டு இந்திய அரசியல்சட்டத்தை செயல் இழக்கச்செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். தமிழ்நாட்டின் ஆளுநரும், ஏனைய ஆளுநர்களும், துணை ஆளுநர்களும் ஒன்றிய அரசின் திட்டத்தை நிறைவேற்றும் கருவிகளாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் சட்டம் வரையறுத்து வழங்கியிருக்கின்ற அதிகாரங்களையும் மீறிய நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள் என்றால், இந்த அத்துமீறிய நடவடிக்கைகள் பற்றி ஒன்றிய அரசுக்கு தெரியாமல் இருக்கவாய்ப்பில்லை. ஒன்றிய அரசுக்குத் தெரிந்திருந்தும், தெரிவிக்கப்பட்டிருந்தும், ஆளுநர்களின் அத்துமீறிய நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவில்லையெனில், ஒன்றிய அரசினுடைய அன்பான அரவணைப்புடன்தான் மறைமுகத் திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள் என்றுதான் அனுமானிக்க வேண்டியுள்ளது. எதிர்க்கட்சிகள் ஆட்சிபுரியும் மாநிலங்களில் ஆளுநர்கள் மூலமாகவும், துணை ஆளுநர்கள் மூலமாகவும் அன்றாடம் பிரச்சினைகளை உருவாக்குவதோடு, அரசியல்சட்டம் மாநிலங்களுக்கு வழங்கியிருக்கும் அதிகாரங்களை ஒன்றிய அரசு கையகப்படுத்தும் திட்டமிட்ட சதிவேலையும் அரங்கேறிக்கொண்டிருக்கிறது. டெல்லியில் "ஆம் ஆத்மி" கட்சியின் தலைவர் கெஜ்ரிவால் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிமுறையில் ஒன்றிய அரசு தலையிட்டமையால், ஆம் ஆத்மி கட்சி உச்ச நீதிமன்றம் சென்றது.

உச்ச நீதிமன்றமும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவ மன்றத்திற்குத்தான் நிர்வாக முடிவுகளை எடுக்கும் அதிகாரம் உண்டு எனத் தீர்ப்பளித்தது. ஆனால், உச்ச நீதிமன்றத் தீர்ப்பினைச் செயல்படுத்தவிடாமல் முரண்பாடு கொண்ட ஒன்றிய அரசு ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து (Ordinance) மீண்டும் ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட துணைநிலை ஆளுநருக்கே அந்த அதிகாரம் உண்டு என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மன்றத்தின் முடிவுகளை ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட துணைநிலை ஆளுநர் தடுத்துவிடலாம் அல்லது மாற்றிவிடலாம் என்றால், ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை என்பது இந்திய அரசியல்சட்டத்தின் நோக்கங்களுக்கும், சிந்தனைகளுக்கும் முற்றிலும் முரண்பட்டது என்பதை தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது.

இப்படி மக்களால் உருவாக்கப்பட்ட குடியரசு ஆட்சி முறையைச் (Republic) சீர்குலைத்து, சிதறடித்துவிட்டு, ஜனாதிபதி ஆட்சிமுறையை அல்லது ஏதாவது ஒருவடிவத்தில் சர்வாதிகார ஆட்சிமுறையை இங்கு கொண்டுவருவதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளின் தொடக்கமாகத்தான் ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையை கருதமுடிகிறது.

மாநிலங்களிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள் அரசியல்சட்டப்படி இயங்குகின்றன. இதில் எதிர்கட்சிகள் வெற்றிபெற்று ஆட்சி அமைத்துள்ள மாநிலங்களில் மட்டும் ஆளுநர்கள் மூலமாக, மாநில அரசுகளின் நடவடிக்கைகளுக்கு தடைவிதிப்பது, சட்டமசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குவதில் காலதாமதப்படுத்துவது ஆகிய நடவடிக்கைகளை ஒன்றிய அரசு தொடர்ந்து மேற்கொண்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. ஒன்றிய அரசின் தூண்டுதல் இல்லாமல், மாநிலங்களில் உள்ள ஆளுநர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் நிச்சயமாக இல்லை, இருக்கவும் முடியாது.

மொழிவாரி மாநிலங்கள் பிரித்தது தவறான நடவடிக்கை என வாதாடுவதும், தமிழ்நாடு என்று அழைப்பது சரியல்ல என்று தமிழ்நாட்டு ஆளுநரே கருத்துத்தெரிவிப்பதும் வேதகால சனாதனக் கோட்பாடுதான் நாட்டுமக்கள் பின்பற்றவேண்டிய கோட்பாடு என ஆளுநரே வாயடக்கம் இல்லாமல் பேசுவதும், சமஸ்கிருதம்தான் சிறந்த மொழி என்று சான்றிதழ் வழங்குவதும், "ஒரேநாடு, ஒரே ஆட்சிமொழி" அது இந்திதான் என ஏதேச்சதிகாரமாக அறிவிப்பதும், சிறுபான்மை மக்களான இஸ்லாமியர்களையும், கிறித்துவர்களையும், ஏனைய பிற சிறுபான்மை மதம் சார்ந்தவர்களையும் அச்சுறுத்தும் நடவடிக்கைகளும், இந்திய அரசியல்சட்டம் உறுதியளித்திருக்கின்ற மதச்சார்பற்ற (Secularism) ஆட்சிமுறைக்கு முற்றிலும் முரண்பட்டவைகளாகும்.

இந்திய நாடாளுமன்றப் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்ட பொழுது பின்பற்றப்பட்ட முறைகள் முற்றிலும் நம்முடைய மதச்சார்பற்ற கோட்பாட்டிற்கு முரண்பட்டதாகும். அது மட்டுமல்ல, பழங்குடி இனத்தைச்சார்ந்த குடியரசுத்தலைவரை முன்னிலைப்படுத்தவும் இல்லை, அழைக்கவுமில்லை. மாறாக பல்வேறு மடாதிபதிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மடாதிபதிகளை வரிசைப்படுத்தி நிறுத்திவைத்து, மதச்சார்பற்ற ஆட்சியின் தலைவர் பிரதமர் நரேந்திரமோடி அவர்களது திருப்பாதங்களுக்கு முன்னர் "சாஸ்டாங்க நமஸ்காரம்" செய்துகொள்கிறார் என்றால், மோடி அவர்கள் தான் பொறுப்பேற்றுக் கொண்ட பொழுது இந்திய அரசியல் சட்டத்தைக் காப்பாற்றுவேன் என்று எடுத்துக் கொண்ட உறுதிமொழி காவியுடை அணிந்த மடாதிபதிகளின் காலடியில் புதைக்கப்பட்டுவிட்டதா(?) என்ற ஐயப்பாடுதான் நடுநிலையாளர்கள் உள்ளத்தில் உதயமாகிறது.

இந்திய அரசியல்சட்டத்தின் தனித்த சிறப்பு அதிகாரம் பெற்ற தேர்தல் ஆணையம், வருமான வரித்துறை, புலனாய்வுத்துறை இன்றைய ஒன்றிய அரசின் ஆட்சியில் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு பல்வேறு நிகழ்வுகளை சான்றுகளாக காட்டிடமுடியும். 13.06.2023 அன்று கூட அமைச்சர் செந்தில்பாலாஜி குறித்த நிகழ்வில் வருமான வரித்துறை சோதனைக்குப் பின்னர் வருமானவரி, அமலாக்கத்துறையின் சார்பாக தலைமைச்செயலகத்தில் சோதனை என்கின்ற அளவிற்கு அதிகாரத்தை கண்மூடித்தனமாகப் பயன்படுத்துகிறார்கள். இந்தச் சோதனை குறித்து தமிழ்நாடு முதல்வர் மிகத்தெளிவாக, இத்தகைய சோதனைகள் கூட்டாட்சித் தத்துவத்திற்கு முற்றிலும் முரண்பட்டது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஆம்! மாநில அமைச்சர் மீது உள்ள குற்றச்சாட்டிற்கு மாநில தலைமைச் செயலகத்தில் ஆய்வு நடத்துவீர்களானால், ஒன்றிய அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகளுக்கு இத்தகைய சோதனைகள் நடத்துவதற்கு யார் உத்தரவிடுவார்கள்? அப்படி நடக்குமா? என்பதெல்லாம் இப்பொழுது மக்கள் மனதில் எழுந்துள்ள கேள்விகளாகும். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடையாக கர்நாடகத்தில் மக்கள் வழங்கிய தீர்ப்பைப்போல விழிப்புணர்வு கொண்ட தமிழ்மக்கள் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயம் வழங்குவார்கள் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. ஆம்! ஜனநாயகத்தில் மக்கள்தான் நீதிபதிகள்!!

இத்தகைய நெருக்கடியான அரசியல் சூழ்நிலைகளுக்கு மத்தியில்தான் தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் "திராவிட மாடல்" ஆட்சியினை வெற்றிகரமாக அமல்படுத்திக் கொண்டிருக்கிறார். திராவிடமாடல் ஆட்சிக்கு விளக்கமளித்த முதல்வர் "எல்லோருக்கும் எல்லாம்" என்பதோடு அது சமூகநீதிக் கோட்பாட்டால் முறைப்படுத்தப்படும் என்று பிரகடனப்படுத்தியுள்ளார். தடைக்கற்கள் எதுவரினும் அதை தகர்த்துவிட்டு, "திராவிடமாடல்" ஆட்சியை முதல்வர் முன்னெடுத்துச் செல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தன்னலம் கருதாச் செயல்வீரர்கள் எப்பொழுதும், எந்தச் சூழ்நிலையிலும் அணிவகுத்துச் செல்ல தயார்நிலையில் காத்திருக்கிறார்கள் என்பதை உணர்த்துவதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். எனவே, ஜனநாயகத்திலும், கூட்டாட்சியிலும், நாட்டின் ஒற்றுமையிலும் நம்பிக்கையுள்ள மக்களும், அரசியல் கட்சிகளும் வேறுபாடுகளை புறந்தள்ளிவிட்டு, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆர்த்தெழுந்து அரசியல்சட்டத்தைக் காப்பாற்றுவோம் - அமைதியை நிலைநாட்டுவோம்! - அதுவே தமிழ் இனத்தின் உறுதியான நிலைப்பாடும், நோக்கமும் ஆகும்!

ராசிபுரம், வெண்ணந்தூர் ஒன்றியங்களில்

ரூ. 15.56 கோடி மதிப்பிலான 20 சாலை மேம்பாட்டுப் பணிகள்!

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார்!

நாமக்கல், ஜூன் 15 - முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ராசிபுரம், வெண்ணந்தூர் ஒன்றியங்களில் ரூ. 15.56 கோடி மதிப்பிலான 20 சாலை மேம்பாட்டு பணிகளை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார்

தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2022 - 2023) வெண்ணந்தூர் ஒன்றியத்தில் 26 கி.மீ. தூரத்திற்கு ரூ. 10 கோடி மதிப்பில் 18 சாலைகள் புதுப்பிக்கும் பணிக்கான துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வெண்ணந்தூர் ஒன்றிய தி.மு.க. செயலாளரும், ஒன்றியக் குழு உறுப்பினருமான ஆர்.எம். துரைசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன், வசந்தி, ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார்.

இதில் கட்டனாச்சம்பட்டி ஊராட்சியில் ரூ 24.09 லட்சம் மதிப்பில் கோரைக்காடு சாலை முதல் முத்துக்காளிப்பட்டி எல்லை சாலை வரையும், இரா. புதுப்பாளையம் ஊராட்சியில் ரூ. 29.60 லட்சம் மதிப்பில் ஆசை டீக்கடை முதல் பட்டணம் சாலை வரையும், ரூ.28.41 லட்சம் மதிப்பில் போதமலை ஆர்.புதுப்பாளையம் முதல் சாணார் தெரு வரை சாலை புதுப்பித்தல் பணி, கல்லாங்குளம் ஊராட்சியில் ரூ.20.15 லட்சம் மதிப்பில் பனங்காடு ஓ.ஹெச்.பி. முதல் கருப்பண்ணன் காடு வரை, தேங்கல்பாளையம் ஊராட்சியில் ரூ 18.07 லட்சம் மதிப்பில் முத்து ஆசிரியர் வீடு முதல் ஆணைப்பட்டியான் காலனி வரை, குட்டலாடம் பட்டி ஊராட்சியில் ரூ. 20.60 லட்சம் மதிப்பில் பனமரத்துப்பட்டி சாலை முதல் மயானம் வரை,

நடுப்பட்டி ஊராட்சியில் ரூ. 157 லட்சம் மதிப்பில் ஆட்டையாம்பட்டி மசக்காளிப்பட்டி சாலை முதல் நரிக்கல்கார்டு வழியாக நடுப்பட்டி தேவேந்திரர் தெரு வரை, அலவாய்ப்பட்டி ஊராட்சியில் ரூ.49.60 லட்சம் மதிப்பில் ஆட்டையாம்பட்டி மசக்காளிப்பட்டி சாலை முதல் அலவாய்ப்பட்டி சாலை வரை, ரூ.24.80 லட்சம் மதிப்பில் ஆட்டையாம்பட்டி மசக்காளிப்பட்டி சாலை முதல் அழகாய்பட்டி சாலை வரை, பழந்தின்னிபட்டி ஊராட்சியில் ரூ. 85.53 லட்சம் மதிப்பில் ஆட்டையாம்பட்டி மசக்காளிப்பட்டி சாலை முதல் பழந்தின்னிப்பட்டி சாலை வரை சாலை மேம்பாடு மற்றும் புதுப்பிக்கும் பணி உள்ளிட்ட 18 பணிகளை நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் துவக்கி வைத்தார்.

தொடர்ந்து தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம் கட்டனாச்சம்பட்டி ஊராட்சியில் 15 வது நிதி குழு மானியம் 2021 - 22 அத்திப்பலகானூர் அருந்ததியர் தெருவில் ரூ. 3 லட்சம் மதிப்பில் பொதுக் கழிப்பிடச் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி மற்றும் ரூ. 5.25 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட சமுதாய சுகாதார வளாகத்தையும் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளின் போது மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் ஏ.ஆர். துரைசாமி, சார்பு அணி நிர்வாகிகள் விஜய்பாஸ்கர், எம்.எம்.ரவி, ரவி சதாசிவம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் நிர்மலா சீனிவாசன், பூங்கொடி சத்தியமூர்த்தி, ராஜேந்திரன், சந்தோசம், தங்கதுரை, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ரவீந்திரன் மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதே போல், ராசிபுரம் ஒன்றியத்தில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.5.56 போடி மதிப்பீட்டில் 11 சாலைகள் புதுப்பிக்கும் பணிகளை ராசிபுரம் ஒன்றியக் கழகச் செயலாளரும், ராசிபுரம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருமான கே.பி.ஜெகநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தனம், மேகலா ஆகியோர் முன்னிலையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பணிகளை துவக்கி வைத்தார்.

கோனேரிப்பட்டி ஊராட்சியில் ரூ.47.30 லட்சம் மதிப்பில் பட்டணம் காக்காவேரி சாலை முதல் மேட்டுக்காடு சாலை வரை, காக்காவேரி ஊராட்சியில் ரூ. 42.75 லட்சம் மதிப்பில் காக்காவேரி பூசாரி பாளையம் பச்சாயி அம்மன் கோயில் வழி சீராப்பள்ளி வரை, வடுகம் ஊராட்சியில் ரூ. 32.65 லட்சம் மதிப்பில் ராசிபுரம் பட்டணம் புதுப்பட்டி சாலை முதல் களரம்பட்டி சாலை வரை, ரூ.67.75 மதிப்பில் வடுகம் போதமலை சாலை மேம்பாடு, ரூ.59.17 லட்சம் மதிப்பில் வடுகம் சீராப்பள்ளி வரை, பொன் ஆயிபாளையம் ஊராட்சியில் ரூ. 34.75 லட்சம் மதிப்பில் ஆயிபாளையம் கொமாரபாளையம் சாலைப்பணி, பொன்குறிச்சி ஊராட்சியில் ரூ. 43.64 லட்சம் மதிப்பில் கல்பாளையம் காட்டுக்கொட்டாய் சாலைப்பணி உள்ளிட்டவற்றை கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் ஏ.கே.பாலசந்திரன் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம் உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், கூட்டுறவுத்துறை, பொது விநியோக திட்டம், தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் வணிகத்துறை உள்ளிட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சா.ப.அம்ரித், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் கருப்புச்சாமி, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் முருகானந்தம் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.

குன்னூரில் பலத்த மழை!

குன்னூர், ஜூன் 15 - தென்மேற்கு பருவமழை தொடங்கியதை அடுத்து நீலகிரியில் மழை பெய்து வருகிறது. கூடலூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வந்தது. நேற்று முன்தினம் பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. இந்த மழையால் பல இடங்களிலும் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றதால் மக்கள் மிகவும் அவதிப்பட்டனர்.

பலத்த சூறாவளி காற்றுடன் பெய்த மழைக்கு, தேவர்சோலை பேரூராட்சி, புழம்பட்டி பகுதியைச் சேர்ந்த பாத்திமா என்பவரது வீட்டின் மீது மரக்கிளை முறிந்து விழுந்தது.

இதில் அவரது வீடு முழுவதும் சேதமடைந்தது. அதிர்ஷ்டவசமாக வீட்டில் இருந்தவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட வில்லை. இதேபோல் குன்னூர் கோத்தகிரி சாலை டாஸ்மாக் குடோன் அருகே மரம் முறிந்து அங்கு நிறுத்தப்பட்ட லாரி மீது விழுந்தது. இதில், லாரியின் முன்பகுதி சேதம் அடைந்தது.

மேலும் வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம்.ஆர். கண்ணன்
ஜூன் 15 (1976)

தந்தை பெரியாரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, கழகம் தோன்றியபோது வாழ்நாள் உறுப்பினராக பதிவு செய்து கொண்டு கழகத்தின்மீது நீங்காப் பற்றும், தணியாத ஆர்வமும் கொண்டு கொள்கை உறுதியோடு கழகப் பணி ஆற்றி வந்தார்.

1959ல் முதன்முதலாக கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சியின் அப்போதைய 27வது வட்ட மன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றியதோடு; 1967, 1971 ஆகிய இரண்டு முறை சென்னை, 'பேசின்பிரிட்ஜ்' சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

"நெஞ்சுரமிக்க தளபதி ஒருவரை சென்னை மாவட்டக் கழகம் இழந்துவிட்டது. அந்தோ! புயலையும் புன்னகையுடன் எதிர்த்து நிற்கும் ஆருயிர் உடன்பிறப்பையல்லவா நான் இழந்துவிட்டேன்" என 'என் நெஞ்சில் நீயிருப்பாய், கண்ணா!' என்ற கடிதத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.